## திருக்கோவிலூர் நகரம்

**அமைப்பாளர் :** வெ.நவநீதகிஷ்ணன், 30/9, கிழக்குத் தெரு, திருக்கோவிலூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.ராமு, 61, தாசார்புரம், திருக்கோவிலூர், விழுப்புரம். (2) செ.கலைச்செல்வன், 7, மந்தக்கரை வீதி, திருக்கோவிலூர், விழுப்புரம். (3) ஏ.வெங்கடேசன், தங்கவேல் மந்தக்கரை வீதி, திருக்கோவிலூர். (4) மா.சல்மான்கான், 141/58–ஏ, தெற்குத் தெரு, சந்தப்பேட்டை, திருக்கோவிலூர், விழுப்புரம். (5) சு.சஞ்சய், சந்தப்பேட்டை ஆசனூர் சாலை, திருக்கோவிலூர், விழுப்புரம்.

## கோட்டாங்குப்பம் நகரம்

**அமைப்பாளர் :** ஏ.வசந்தராஜ், 1, தென்றல் நகர், கி.கடற்கரை சாலை, வானூர், விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஆ.துளசிங்கம், 14, ஐயனார் கோயில் தெரு, பெரிய முதலியார்சாவடி, வானூர், விழுப்புரம். (2) ம.தினேஷ், 55, கன்னியம்மாள் கோயில் தெரு, சின்னக் கோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம். (3) மு.மன்சூர், 43, பழைய பட்டணப் பாதை, கோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம். (4) மு.அப்துல் பகத், 54, லைலத்துல் வீதி, இந்திரா நகர், கோட்டங்குப்பம், வானூர், விழுப்புரம். (5) ச.பழனி, 18/48, காயிதே மில்லத் வீதி, இந்திரா நகர், கோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம். (6) மா.பிரேம்குமார், 7, அக்பர் வீதி, புறாத்தோப்பு, கோட்டக்குப்பம், வானூர், விழுப்புரம்.

## விழுப்புரம் நகரம்

**அமைப்பாளர் :** செ.மணிகண்டன், 24, ஜி.ஆர்.பி.தெரு, விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) எஸ்.வெற்றிவேல், 28, பெரியார் தெரு, கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம். (2) எஸ்.சித்திக் அலி, 1–ஏ, ராஜகோபால் தெரு, விழுப்புரம். (3) பி.கே.சங்கர், 197, திருவள்ளுவர் தெரு, சீனுவாசா நகர், சாலாமேடு, விழுப்புரம். (4) கோ.மோகன்ராஜ், 10, வண்டிமேடு, விழுப்புரம். (5) ஆர்.பிரபு, 16/13, வெங்கட்கிருஷ்ணன் தெரு, வி.மருதூர், விழுப்புரம். (6) மு.சிவமுருகன், 8, மணிமேகலைத் தெரு, கிழக்குப் பாண்டி ரோடு, விழுப்புரம். (7) எம்.புஷ்பராஜ், 14/34, வரதப்பன் தோப்பு, விழுப்புரம். (8) ரா.சுரேஷ், துரைராஜ் நகர், சாலாமேடு, விழுப்புரம்.

## அரகண்டநல்லூர் பேரூர்

**அமைப்பாளர் :** ச.தினகரன், 27, மாரியம்மன் கோயில் தெரு, அரகண்டநல்லூர், விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.விக்னேஷ், 52, கண்டாச்சிபுரம் ரோடு, அரகண்டநல்லூர், விழுப்புரம். (2) ப.பொன்னழகன், 9–ஏ, விநாயகர் கோயில் தெரு, அரகண்டநல்லூர், விழுப்புரம். (3) மோ.முகேஷ், 4/129, நேருஜி தெரு, அரகண்டநல்லூர். விழுப்புரம்.

## வளவனூர் பேரூர்

**அமைப்பாளர் :** சூ.முருகன், 86, தெற்கு அக்ரஹாரம், வளவனூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.பச்சையப்பன், 14/ஏ, ஏரிக்கரை மேட்டுத் தெரு, வளவனூர், விழுப்புரம். (2) சி.சுரேந்தர், 10/14 தோட்டக்காரத் தெரு, குமாரகுப்பம், வளவனூர், விழுப்புரம். (3) ரா.டேவிட் ராஜா, 235, கிழக்கு பாண்டிச் சாலை, வளவனூர், விழுப்புரம்.

## திருவெண்ணெய்நல்லூர் பேரூர்

**அமைப்பாளர் :** பெ.சுரேஷ், 22, மேல் பாதி தெரு, காந்தி நகர், திருவெண்ணெய்நல்லூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ச.மணிகண்டன், மேற்குத் தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (2) தா.சதாம் காதர் உசேன், 4, பெரியார் தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (3) வெ.ஜெகநாதன், பெருமாள் கோயில் தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம். (4) வி.சுலைமான், 30, கருமார மேஸ்திரி தெரு, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம்.

## விக்கிரவாண்டி பேரூர்

**அமைப்பாளர் :** இரா.கார்த்திக், 12/2, வீரன் கோயில் தெரு, விக்கிரவாண்டி, விழுப்புரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.சிவா (எ) சிவசந்திரன், 4, பழைய காவல் நிலைய வீதி, விக்கிரவாண்டி, விழுப்புரம். (2) ரா.உதயநிதி பாலு (எ) பாலசுப்பிரமணியன், செட்டீஸ்வரன் கோயில் தெரு விக்கிரவாண்டி, விழுப்புரம். (3) வீர.ராஜசேகர், ஒத்தவாடித் தெரு, விக்கிரவாண்டி, விழுப்புரம். (4) ஆ.இளவரசன், 44, கக்கன் நகர், விக்கிரவாண்டி, விழுப்புரம். (5) ஞா.நீலநாராயணன், ரெட்டிகுப்பம் சாலை, விக்கிரவாண்டி, விழுப்புரம்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 11–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

# கடந்த மூன்றரை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 1000க்கும் மேற்பட்ட மேம்பாலங்கள்!

## சட்டப்பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, ஜன. 12-**

**தமிழ்நாட்டில் இந்த மூன்றரை ஆண்டுகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன என்று பேரவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்துள்ளார்.**



இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**ரா.இளங்கோ :** அரவக்குறிச்சி தொகுதி, நொய்யலில் இருந்து வேலாயுதம்பாளையம் செல்லும் சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** உறுப்பினர் அவர்கள் கோரிய இரயில்வே மேம்பாலம் கொடுமுடி மற்றும் புகளூர் இரயில்வே நிலையங்களுங்கிடையே கடவு எண் 32 ஆகும். பொதுவாக இரயில்வே மேம்பாலம் அமைக்க கடவு வாகனங்களுடைய அளவு, அதாவது Train Vehicle Unit (TVUs) ஒரு இலட்சத்திற்குமேல் இருக்க வேண்டும். அது சம்பந்தப்பட்ட கடவு எண் 32 railway gateல் தற்போது வாகனத்தினுடைய செறிவு என்பது 1 இலட்சத்து 22 ஆயிரத்து 29 ஆகவுள்ளது.

ஆனால், 2023 - 2024 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும், இதற்காக 55 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான நிர்வாக அனுமதி பரிசீலனையில் உள்ளது. பொதுவாக இது போன்ற இரயில்வே பாலம் கட்டுகின்றபோது, 50 சதவிகிதம் ஒன்றிய அரசாங்கத்தின் நிதியிலிருந்தும், 50 சதவிகிதம் மாநில அரசாங்கத்தின் நிதியிலிருந்தும் கட்டப்படுகிறது. எனவே, அந்த அடிப்படையிலே இந்த ஆண்டு திட்ட அறிக்கை வந்தவுடன், அதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும்.

**ரா.இளங்கோ:** அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட நொய்யிலிருந்து வேலாயுதம்பாளையம் செல்லும் சாலை, மிகவும் முக்கியமான சாலை. இந்த சாலை ஐந்து மீட்டர் சாலையாக இருந்தது. இதை நம்முடைய திராவிட மாடல் அரசு 10 மீட்டர் சாலையாக தரமுயர்த்தி தந்ததற்கு, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் திட்டத்தைப் பெற்று தந்த மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த வேளையில் நான் நன்றியை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சாலையில் இரயில்வே பாதை அமைந்துள்ளது. ஒரு நாளைக்கு 30க்கும் மேற்பட்ட இரயில்கள் இந்தச் சாலை வழியாக கடந்து செல்கிறது. இதனால் இந்தப் பகுதியிலுள்ள பள்ளிகளுக்குச் செல்கின்ற வாகனங்கள், ambulance வாகனங்கள், புகளூர் சர்க்கரை ஆலைக்கு செல்கின்ற கரும்பு lorryகள் நீண்ட வரிசையில் நிற்கின்ற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வேன் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு நான் இந்த வேளையில் நன்றியை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு சாலைப் பணியை முடித்து தர வேண்டுமென்று வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** உறுப்பினர் அவர்களே நன்றி சொல்லிவிட்டார். இந்த ஆண்டிலே திட்ட அறிக்கையில் 52 இலட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசாங்கத்திற்கும், இரயில்வே துறைக்கும் நாங்கள் ஏற்கெனவே கடிதம் எழுதியுள்ளோம். இந்த ஆண்டிலே விரைந்து கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்யும்.

**ரா. இளங்கோ:** அமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டு, கரூரிலிருந்து ஈரோடு செல்லுகின்ற சாலையானது நான்கு வழிச் சாலையாக தரமுயர்த்தப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. நொய்யல் பகுதியில், நொய்யல் ஆற்றின் மேலே இருக்கின்ற உயர்மட்டப் பாலம் குறுகலாக உள்ளது. இந்தப் பாலத்தின் பக்கத்தில் புதிய பாலம் அமைத்துத் தரப்படுமா?

**திட்ட மதிப்பீடுகள்!**

**அமைச்சர் எ.வ.வேலு:** முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே போக்குவரத்து செறிவை பொறுத்தளவுக்கு நான்குவழிச் சாலையாக ஆக்க வேண்டுமென்று ஒரு முடிவு செய்தார்கள். அந்த அடிப்படையில்தான் போக்குவரத்து அதிகமாக இருக்கிற காரணத்தினால், ஈரோடுகரூர் நான்குவழிச் சாலை யாக அமைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தப் பாலம் 2025 - 2026 ஆம் ஆண்டு, இந்த ஆண்டிலே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து கொண்டிருக்கிறோம்.

**கு.செல்வப்பெருந்தகை:** நடுக்கடலில் அய்யன் திருவள்ளுவரையும், விவேகானந்தரையும் ரூ.37 கோடி பொருட் செலவில் இணைத்து உலகமே அறியாத தொழில்நுட்பங்களுடன் அந்தப் பாலத்தை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைத்த பொதுப் பணித் துறை, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது படப்பையிலும், திருப்பெரும்புதூரிலும் அந்தப் பாலங்கள் என்ன நிலையில் இருக்கின்றன? அதனை நீங்கள் கூடிய விரைவில் நிறைவேற்றித் தருவீர்களா? முதலமைச்சர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாலமாக இருக்கிற அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தை வெகுவிரைவில், போர்க்கால அடிப்படையில் கட்டித் தருவீர்களா?

**எ.வ.வேலு:** அங்கு போக்குவரத்து அதிகமாகத்தான் இருக்கிறது. அந்தப் பாலத்தை நானே இரண்டு முறை நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். அந்த ஒப்பந்ததாரரை நானே நேரடியாக அழைத்துப் பேசியிருக்கிறேன். ஆகவே, விரைந்து அந்தப் பாலத்தை இந்த ஆண்டே முடிப்பதற்கு வேண்டிய பணிகளை இந்தத் துறை எடுத்துக்கொள்ளும்.

**மதுரை தெற்கு வாசல் மேம்பாலம்!**

கோ. தளபதி: மதுரை மாநகரில் தெற்குவாசல் பாலம் 1974 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் திறக்கப்பட்டு, 50 ஆண்டுகளாகிவிட்டன. மேற்படி பாலம் 7 மீட்டர் அகலம் உள்ளதால் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், அந்தச் சாலை மதுரை விமான நிலையத்திற்கு செல்லக்கூடிய சாலையாகும். ஆகையால், மேற்படி பாலத்தை அகலப்படுத்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**எ.வ.வேலு:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிய மேம்பாலம் என்பது 7 மீட்டர் அகலம்தான் இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்போது, இரயில்வே மேம்பாலத்தினை நான்குவழிப் பாதையாக அகலப்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கிற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கிற பணி முடிவுற்றவுடனேயே இரயில்வே மேம்பாலம் அகலப்படுத்துகிற பணி தொடங்கப்படும்.

**செ.ஸ்டாலின்குமார்:** என்னுடைய துறையூர் தொகுதியில் வெங்கடேசபுரம், கோட்டையூர், கருப்பம்பட்டி, கரட்டூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நடுவிலே இருக்கக்கூடிய ஐயாற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும். ஏற்கெனவே அந்தச் சாலையானது ஊராட்சி ஒன்றிய சாலையாக இருந்து நபார்டு கிராமச் சாலையாக மாற்றம் செய்யப்பட்டு, சாலைப் பணி முடிவுற்றிருக்கிறது. தற்போது, அந்த 5 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சேனப்பனூர், நாமநாயக்கன் பட்டி, கங்காணிப்பட்டி வழியாக வி.ஏ. சமுத்திரம் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இந்தச் சாலை துறையூரிலிருந்து நாமக்கல் செல்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எனவே, கருப்பம்பட்டியையும் வி.ஏ. சமுத்திரத்தையும் இணைக்கக்கூடிய அந்த ஐயாற்றுப் பாலத்திற்கு ஏற்கெனவே நபார்டு மற்றும் கிராமப்புறச் சாலைத் திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறை மூலமாக estimate அனுப்பப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்கிற திட்டத்தின்கீழ், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இந்தத் திட்டத்தை வழங்கியுள்ளேன். எனவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டித் தர முன்வருவார்களா?

**அமைச்சர் எ.வ.வேலு:** ஸ்டாலின்குமார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பாலம் என்பது பொதுவாக, கிராமச் சாலைகளிலே பல்வேறு பாலங்கள் தொடர்ந்து இந்த மூன்றரை ஆண்டுக்காலத்திலே கட்டிக் கொண்டு வருகிறோம். அதிலும் குறிப்பாக ஆயிரத்திற்கும் மேற்பட்டிருக்கிற பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. எஞ்சியிருக்கிற இந்தப் பாலம்ஏறத்தாழ இன்னும் 67 பாலங்கள் தமிழ்நாட்டிலே கட்டப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. அந்தப் பாலங்களில்தான் இது உண்டு. எனவே, இந்த 67 பாலங்கள் கட்டுவதற்குரிய தொகையைக் கேட்டு ஏற்கெனவே நிதித் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். அதற்கான இசைவு பெற்றவுடனேயே உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியை முன்னுரிமையாக எடுத்துக்கொண்டு, அந்தப் பாலத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**கே.ஆர். ஜெயராம்:** கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, திருச்சி சாலையிலே 2.4 கிலோ மீட்டர் அளவுக்கு உயர்மட்டப் பாலம் அமைக்க 2022 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் வருவதால் காலதாமதமானது. தற்போது, மெட்ரோ திட்டப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நெடுஞ்சாலைத் துறையும் ஒப்புதல் அளித்துள்ளது. 5 முறை ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, இது வரை ஒப்பந்தப்புள்ளி யாரும் எடுக்கவில்லை என்பது தெரிய வருகிறது. ஆகவே, விரைவிலே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் ?

**அமைச்சர் எ.வ.வேலு:** அவருடைய கேள்வியிலே அவர் பதில் சொல்லி விட்டார். நாங்கள் தொடர்ந்து இதுவரைக்கும் ஒப்பந்தம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். யாரும் உரிய ஒப்பந்ததாரர்கள் வரவில்லை. காரணம் அதற்கு rate கட்டுப்படியாக வில்லை என்ற நிலையில் இருக்கிறது. எனவே, அதை மீண்டும் நிதித் துறைக்கு அனுப்பி, மீண்டும் reestimate போட்டு அதற்குப் பின்னால் அந்த ஒப்பந்தம் கோரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



புதுக்கோட்டை தெற்கு கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மற்றும் மருத்துவ அணி சார்பில் பனையப்பட்டியில் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் இரா. மேகநாதன் தலைமையிலும், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் சுதர்சன் வரவேற்புரையிலும் நடைபெற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர் , துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் ரகு. அண்ணாமலை, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் எழில் மாறன் செல்வேந்திரன், தலைமை கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், ஆலங்குடி செல்வராஜ், இளம் பேச்சாளர் மதுமிதா, ஒன்றியச் செயலாளர்கள் இரா.கணேசன், ஆறு.சிதம்பரம், எஸ்.எம். சீனிய மற்றும் டாக்டர் சதீஷ், தேவி, பாத்திமா பீவி, கே.ஆர்.ராமசாமி, இரா.சிவகுமார், அருண் சேகர், சுப பழனிச்சாமி, எஸ்.பி. நாகராஜன், சுப.சின்னையா, அ.லோகநாதன், டி.ரமேஷ், செந்தில் வேலன், சோ.ராமச்சந்திரன், அ.ஆறுமுகம், பிரகதம்மாள் ராஜேந்திரன், கே.என்.பி.எஸ்.நாடிமுத்து, ஆக்காட்டி ஆறுமுகம், டாக்டர் ராஜசேகர பாண்டியன், டாக்டர் எஸ்.கே.டி.ராஜபிரியா, டாக்டர் கே.இளையராஜா, டாக்டர் ஆர்.கண்ணதாசன், பி.கண்ணன், டாக்டர் எஸ்.செந்தில் ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உள்ளனர்.

# தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சமத்துவ பொங்கல் விழா!

## மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர் ஜன.12.

தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க கழகம் சார்பில் பட்டுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ள சமத்துவப் பொங்கல் விழாவில் கழக தோழர்கள் திரளாது கலந்து கொள்ள மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை. எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.




கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிக்காட்டுதலின் படி "தமிழர் திருநாள்" தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் சமத்துவ பொங்கல் விழா இன்று (12.01.2025) ஞாயிறு காலை 09.00 மணியளவில், பட்டுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் அனைத்து தரப்பு மக்களோடு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், ச.முரசொலி எம்.பி, என்.அசோக் குமார் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்.

அதுசமயம் விழாவில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநிலக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் காஅண்ணாதுரை எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.




தருமபுரியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி பாக இளைஞர்கள் சமூக வலைதள பயிற்சி கூட்டம் தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ சுப்ரமணி தலைமையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர், மண்டல பொறுப்பாளருமான பி.எஸ். சீனிவாசன் முன்னிலையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக திராவிட இயக்க எழுத்தாளர் மதிமாறன், கழக இளைஞரணி சமூக வலைதள பயிற்சியாளர் மா.இளமாறன் பங்கேற்று சமூக வலைத்தளங்களில் பாக இளைஞர் அணி நிர்வாகிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று பயிற்சி அளித்தனர். நகர செயலாளர் நாட்டான் மாது, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன் ஏற்பாட்டில் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அசோக்குமார், செல்வராஜ், கலைச்செல்வன், ராஜகோபால், முத்தமிழ், கார்த்திக், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள், பாக இளைஞர்கள் கலந்து கொண்டனர்.